# பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

## எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்

# வெற்றிடங்கள்

எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தில் உள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதிபெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## தகைமை – பொது முகாமையாளர்

*** தகைமை - வெளிவாரி**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட ஆரம்பப் பட்டம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் பட்டப்பின்படிப்பு பட்ட தகைமை (முதுமாணி) அல்லது முகாமைத்துவம் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் அங்கத்துவத்துடன் உறுதி செய்ய முடியுமான அறிக்கை ஒன்றுடன் அரச அல்லது தனியார் துறை நிறுவனம் ஒன்றில் ஆரம்பப் பட்டத்தைப் பெற்ற பின்னர் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 05 ஆண்டுகள் உட்பட முகாமைத்துவ தரத்தில் 20 ஆண்டுகள் அனுபவம்

*** தகைமை – உள்ளக விண்ணப்பதாரர்கள்**

எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் முகாமைத்துவ பிரிவின் பிரதி பொது முகாமையாளர் பதவி ஒன்றில் குறைந்தது 03 ஆண்டுகள் திருப்திகரமான சேவை

| | |
|---|---|
| சம்பள அளவு: | ரூபா 161, 140/-, 12x4850 =219,340/-(HM 2-1-2025) |
| அடிப்படை சம்பளப் படி: | ரூபா 140,317/- (முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2025 இன் அட்டவணை II இற்கு அமைய) |
| நியமன பண்பு: | ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரித்துடையதாக நிரந்தரமானது |
| வயது வரம்பு: | 40 வயதுக்கு குறைந்தவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது. |
| ஆட்சேர்ப்பு நடைமுறை: | நியமன அதிகாரிகளினால் நியமிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை முடிவின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். |

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

| | |
|---|---|
| • தொடர்புடைய மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| • தொடர்புடைய மேலதிக தகைமைகள் | 30 புள்ளிகள் |
| • மற்ற அடைவுகள் | 15 புள்ளிகள் |
| • நேர்முகப்பரீட்சையின் செயல்திறன் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

வேறு –

- பதவியின் கடமைகளை செயல்திறனுடன் மேற்கொள்வதற்கும், நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல்.
- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் - விண்ணப்பதாரரினால், அனைத்து விபரங்கள் மற்றும் பிறப்பு, கல்விச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவம் தொடர்பில் சான்றிதழ்களின் பிரதிகளுடன் தயாரிக்கப்பட்ட விண்ணபத்தை, கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு, பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த விண்ணப்பங்களை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். குறித்த ஏற்றல் நிறைவு செய்யப்படும் நேரத்தின் பின் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி 2026 செப்டெம்பர் 04 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்**
**எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்**
**ரத்வத்த, உக்குவெல**
**திகதி 2026 ஓகஸ்ட் 13**